as a News Paper        பக்கங்கள்: 04        விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM        Peoples Daily        மக்கள் தினசரி

தம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 17    (01-01-1992)    புதன்கிழமை    ஓசை: 317

## யாழ். பாடசாலைகளில் தற்காலிக ஆசிரியர் பதவி

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் மூன்றுபாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தற்காலிக ஆசிரியர் பதவி வழங்கப்படவுள்ளது. விண்ணப்பதாரிகள் அண்மையில் உள்ள கொத்தணி அதிபர்களிடம் எழுத்து மூலம் விண்ணப்பிக்கலாம். பாடசாலைக்கு அண்மையில் இருப்பவர்களுக்கும், ஏற்கனவே பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச்சபையின்கொடுப்பனவைபெற்று கற்பித்தலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மாதம் 500 ரூபா செலவுப் படியாக (3ஆம் பக்கம் பார்க்க)

# ...ாண்டமானின் திட்டத்தை ...ரசாங்கம் புறக்கணிப்பு

(கொழும்பு)

...ழர் தேசிய பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள தீர்வுத் ... ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி புறக்கணித்துள்ளது. அமைச்சர் தொண்டமானின் ...ட்டம் பற்றி அமைச்சர் அவைக் கூட்டங்களிலோ அல்லது நேற்று முன்தினம் நடை... தே. கட்சியின் செயற்குழு கூட்டத்திலோ விவாதிக்கப்படவில்லை. இது குறித்து அரசாங்கம் ...ருத்தும் தெரிவிக்கவில்லை. இதிலிருந்து அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டத்தை பிரே... அரசு உதாசீனம் செய்துவருகிறது என்பது தெளிவாகிறது.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் சில சர்ச்சைக்குரிய யோசனைகள் அடங்கியிருப்...ம் பௌத்த பீடங்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருவதாலும் அரசாங்கம் இந்த நழுவல் ...கையை கடைப்பிடித்து வருவதாக கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

...சர் தொண்டமா... தீர்வுத் திட்டத்தை ...த் தொழிலாளர் ...மின் யோசனைகள் ...யும் இத் திட்டம் ...ன்ற தெரிவுக் குழு...வின் பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது என்பதையும் பிரேமதாசா அரசு வலியுறுத்தி வருகிறது. அத்துடன் தமிழரின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொறுப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவிடமே ஒப் படைக்கப்பட்டிருப்பதாகவும் கூறிவருகிறது.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டத்திற்கு முதலில், மறைமுக ஆதரவு வழங்கி வந்த ஐ. தே. கட்சி அரசாங்கம் தென்னிலங்கையில் ஏற்பட்ட பௌத்த பீடங்களின் பலத்த எதிர்ப்பைத் தொடர்ந்து தற்பொழுது நழுவல் போக்கை கடைப்பிடிப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் மூலமே தமிழர்களின் பிரச்சினைக்கு சரியான தீர்வைக் காணமுடியும் என்றும், மொழி, கல்வி, வேலைவாய்ப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## காவல்துறை நிலையங்கள் மூன்று இன்று திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ காவல்துறையின் மேலும் மூன்று அலுவலகங்கள் இன்று காலை திறக்கப்பட உள்ளன.

காலை ஏழு மணிக்கு சங்கானை அலுவலகமும் எட்டு முப்பது மணிக்கு கோப்பாய் அலுவலகமும் ஒன்பது முப்பது மணிக்கு சாவகச்சேரி அலுவலகமும் திறந்துவைக்கப்பட உள்ளதாக தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## கடல்நீரேரி மோதலில் மேலும் இருபடை பலி

(கொழும்பு)

யாழ்ப்பாணக் கடல்நீரேரிப் பகுதியில் வைத்து சிறிலங்கா ஆயுதப்படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இராணுவத்தினர் இருவர் உயிரிழந்தனர் என கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற அதிரடித்தாக்குதலின் போது ஏழு இராணுவத்தினர் (3 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் நீரேரியில் மேலும் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணக் கடனீரேரிப் பகுதியில் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து மேலும் ஒரு தொகுதி ஆயுதங்கள் நேற்றும் மீட்கப்பட்டன.

- ★ ரி-81 ரகத் துப்பாக்கிகள் - 02
- ★ ரி-56-2 ரகத் துப்பாக்கி - 1
- ★ ரி-81 ரகத்துப்பாக்கிக்கான ரவைக் கூடுகள் - 10
- ★ ரி-56 ரகத்துப்பாக்கிக்கான ரவைக்கூடுகள் - 04
- ★ 7.62 ரக நடுத்தர ரவைகள் - 410
- ★ ஜே. ஆர். ரக கைக்குண்டுகள் - 06

என்பன நேற்று நடத்தப்பட்ட தேடுதலின்போது கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதத் தொகுதியில் அடங்குகின்றன.

## ...வாதயத்தின்இனவாதம் ...டித்து உண்ணாவிரதம்

...தயம் அலுவலகத் ...ன்பாக சர்வோதயத் ...புரியும் ஊழியர்கள் ...தொண்டர் ஆசிரியர்க... ...யாள உண்ணாவிர... நடைபெறவுள்ளது ... -கிழக்குப் பகுதித் ...ின் புனர் வாழ்விற் ...நாடுகளிடமிருந்து பெறப்பட்ட நூற்றி எண்பது மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி இப்பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்ற சர்வோதயம் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதைக் கண்டித்து இந்த அடையாள உண்ணாவிரதம் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## ...ம், காரைநகர், தெல்லிப்பளை ...மீட்பு நிதி செலுத்த ...ரு நாட்கள் ஏற்பாடு

(...ழ்ப்பாணம்)

...காரைநகர் பகுதி... இடம்பெயர்ந்து ...டங்களில் வதிவோர் ...மீட்பு நிதியினை ...ழுங்கு செய்யப்பட்... இவர்கள் எதிர்வரும் ...கதி (செவ்வாய்க்கிழமை) மாலை 2·30 மணி முதல் 4·00 மணி வரை திருநெல்வேலியில் அமைந்துள்ள தமிழீழ மீட்பு நிதி தொடர்பகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தெல்லிப்பளை உதவி அர (3 ஆம் பக்கம் பார்க்க)

## ...தே. கட்சியிலிருந்து ...வும் இருவருக்கு கல்தா

...கட்சியிலிருந்து ...இரண்டு பாராளு...அங்கத்துப்பினர்கள் நீக்கப்...னர் என்று ஐ.தே.க. ...ற்குழு தெரிவித்துள்...யாளர்களான கம்பஹா மாவட்ட எம். பி. ஆரியரட்ண ஜெயதிலக்கா, பொலநறுவ மாவட்ட எம், பி. எஸ். ஜே. முத்துபண்டா ஆகிய இருவருமே இவ்வாறு விலத்தப்பட்டுள்ளார்கள்.

...தே. கட்சியின் அதிருப்தி

## மலேசியாவில் புலிகள் தளம்; பொலிஸ்மா அதிபர்ஹமீதும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மலேசியாவில் தளம் இருக்கக் கூடுமென மலேசிய பொலிஸ்மா அதிபர் ஹமீட் உமரேயை ஆதாரம் காட்டி சிறிலங்கா வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இயக்கத்திற்கும், மலேசியாவிலுள்ள சில சக்திகளுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதை அவர்களால் மறுக்க முடியாதுஎனவும் அவர் தெரிவித்துள்ளதாக அதில் குறிப்பிட்டுள்ளது.

கடந்தமேமாதம் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே முக்கிய சந்தேகநபர்கள் என்பதாலும்,

சமீபத்தில் வட கொனாய் தீவில் வெளிநாட்டுப் படகொன்றை பொலிஸார் கைப்பற்றினர் என்றும் இதில் தொலைத் தொடர்புச்சாதனங்கள், சீருடைகள் ஆகியவற்றை கண்டு பிடித்தனர் என்றும்,

இதிலிருந்து விடுதலைப் புலிகள் மலேசியாவில் தொடர்பு வைத்திருப்பதற்கானஆதாரம் கிடைத்ததாக ஹமீட் தெரிவித்துள்ளாராம்.

அத்துடன் இப் படகு இலங் (3 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு மதிச்செல்வன், கௌரி

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை மாவட்டத்திலிலுள்ள குச்சவெளிக்கு சமீபமாக சல்லி முந்தல் என்ற இடத்தில் கடந்த ஞாயிறன்று சிறிலங்கா இராணுவத்துடன் நடந்த மோதலில் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் கொண்டுவரும் போது (4 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

## இலங். திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு கேள்விக்குரியது

### சர்வதேச மனித நேய ஸ்தாபனங்கள் கருத்து

தமிழ்நாட்டிலுள்ளஇலங்கை அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதைப் புத்தாண்டின் தொடக்கப்பகுதியில் நடைமுறைப்படுத்த சிறிலங்கா அரசும் இந்திய அரசும் திட்டமிட்டுவருகின்றன என்று பி. பி! ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சுமார் 2 லட்சம் அகதிகள் இடம்பெயர்ந்துள்ளனர். 16,000க்கும் அதிகமான அகதிகள் இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துப் பத்திரங்களில் கைச்சாத்திட்டதாக இந்திய அதிகாரிகள் கூறுகின்றனர். இந்தப் பத்திரங்கள் ஆங்கிலமொழியில் இருப்பதாகவும், அகதிகள் பலருக்குத் தமிழ் மட்டுமே தெரியும் என்பதாலும் இவர்கள் எதற்குக் கையொப்பம் வைக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளாமல் இந்தப் பத்திரங்களில் கையொப்பம் இட்டுவிட்டதாக சென்னையில் அகதிகள் நலன் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. அதன் செய்திக் குறிப்பில் அறிவித்தது.

இலங்கையில் தாம் பாதுகாப்பாக வாழமுடியாதுஎன்று அகதிகளின் பெரும்பான்மையோர் தெரிவிக்கின்றனர். இலங்கையில் பணிபுரியும் சர்வதேசக் குழுக்கள் பலவும் இதே கருத்தைத் தெரிவிக்கின்றன.

அகதிகள் திரும்புவதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றாலும் (3 ஆம் பக்கம் பார்க்க)

## ...லித் எதிரணிப் பட்டியலில் முதலிடம் பெற முயற்சி

...னி - அத்துலத்முதலி ...ஜனாதிபதிக்கான தேர்...வேட்பாளர் பட்டியலில் ... பண்டார நாயக்கா...ாம் இடத்துக்குத் தள்...ட்டுள்ளார். இரத்மலா...ல் ஒட்டப்பட்டிருக்கும் ...ட்டிகளில் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் அத்துலத் முதலியின் பெயர் முதலாவதாகவும், காமினி திஸநாயக்காவின் பெயர் இரண்டாவதாகவும் அநுரா பண்டாரநாயக்காவின் பெயர் மூன்றாவதாகவும் காணப்படுகின்றன.

இரத்மலானை அத்துலத் முதலியின் தேர்தல் களமாகும் எந்தக் கட்சியிலும் முதலாவது இடத்தைப் பிடிக்க வேண்டுமென்ற அத்துலத் முதலியின் எண்ணத்தின் பிரதிபலிப்பை சுவரொட்டிகள் தெரியப்ப (3 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயிகள் இருவர் இராணுவத்தால் கொலை

கொக்கட்டிச் சோலைப் பகுதியிலுள்ள அரசடித் தீவில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தால் இருதமிழர் கொல்லப்பட்டனர். மேலும் காங்கேயணோடைப்பகுதில் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் தமிழரொருவர் படுகாயமுற்றுள்ளார்.

## எல்லோருக்கும் "மில்க்வைற்" புத்தாண்டு வாழ்த்துக்கள்!

எவர்சில்வர், பிளாஸ்ரிக், அலுமினியம், பித்தளை, கண்ணாடிப் பாத்திரங்களைப் பளிச்சிடத் துலக்க --

**நிம்**

ஓர் ஒப்பற்ற துலக்கும் சாதனம்.
வேம்பின் ஆதாரம்,
"மில்க்வைற் உற்பத்தி"
உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள்.
பாவித்த லேபலுடன் கூடிய வெற்றுப் போத்தலைக்கொடுத்து
ரூபா. 2/- கழிவு பெறுங்கள். (சி/3718)

## O/L

(ஆண்டு 11)
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்:
**05 - 01 - 92**

3 - 1 - 92 இற்கு முன்னர் பெயர் களைப் பதிவு செய்யவும்.

**யூனிவேர்சல்**
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(சி 3722)

## நிர்வாகிகள்

நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் வருடாந்த நிர்வாகிகள் தெரிவு கடந்த 28.12.91 அன்று நடைபெற்றது. தலைவராக திரு. சிறிகந்தபாலனும், உபதலைவராக ச. சுபத்ராவும் செயலாளராக க. கேந்திரனும், பொருளாளராக எஸ்.ஜி ரகுநாதனும் நிலையப் பொறுப்பாளராக செ. டயாந்திராவும் மற்றும் ஐவர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 93**
புதிய பிரிவு

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. வரதராஜன் |
| அளவையியல்: | திரு. S. S. மனோகரன் |
| ) | திரு. மரியதாஸ் |
| கணக்கியல்: ) | திரு. யோகராஜா |
| ) | திரு. சௌந்தி |
| வர்த்தகம்: | பிரபல ஆசிரியர் |
| தமிழ்: | திருமதி மீரா |
| இந்து நாகரிகம்: | திருமதி அருள்நங்கை |
| புவியியல்: | திரு ஜோசப் |
| அரசியல்: | திரு. செல்வா |

**ஆரம்பம்: 4 - 1 - 92**
— சனி, காலை 8 - 00 மணி —

குறிப்பு: பிரிவு I-ல் அனுமதி பெற்ற மாணவர்கள் வழமையான நேர அட்டவணைப்படி 4-1-92 ல் வரவும். (சி 3708)

## 9ஆம் நாள் நினைவலைகள்



**கப்டன் வாணன்**
(சண்முகலிங்கம் மோகனகுமார்)
வீரமண்ணில்
**01-08-1973**
வீரச்சாவு
**24- 2-1991**

கண்களில் சோக நீர்
பனித்திட
எங்களின் மௌன
அஞ்சலிகள் உங்களுக்கு

இவரின் இல்லத்தில் நாளை நடைபெறவிருக்கும் கிரியையில் நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இவருடன் இதே நாளில் வீரச்சாவு எய்திய வீரவேங்கை இளம்பரிதி, லெப். சீராளன் ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

நண்பர்கள்,
சகோதரர்கள்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.
(சி 3725)

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட், வட்டுக்கோட்டை.

ஸ்தாபிதம்: 1957 பதிவு இலக்கம்: S. 154

எங்கள் சங்கத்தின் ஆயிரமாயிரம் அங்கத்தவர்களுக்கும் எமது மனம் நிறைந்த மங்களப்

❋ புத்தாண்டு வாழ்த்துக்கள் ❋

புத்தாண்டே வருக! புதுமைகள் தருக!
எங்கள் இன்னல்கள் தீர்க்க விடிவுடன் வருக!!
பூத்தது புதுயுகம் எனப் பொலிவுடன் வருக!!!

எமது ஸ்தாபனத்தில் இன்றே உங்களையும் குடும்பத்தவரையும் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளுங்கள்.
மக்கள் வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்வையும் எதிர்கொள்ளும் வகையில் எமது சேவைகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.

❋ அப்பழுக்கற்ற 35 வருட சேவை
❋ யாழ் மாவட்டம் முழுவதும் பரந்துபட்ட தொழிற்பாடு
❋ அங்கத்தவர் தொகை 8000
❋ இதுவரை வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 36 இலட்சம்

நன்கொடைகள் :

- ❋ ருது கல்யாணம்
- ❋ திருமணம்
- ❋ முதிர்ச்சிச் சகாய நன்கொடை
- ❋ அந்தியகாலம்

இதர சேவைகள் :

- ❋ கைமாற்றுக் கடன்
- ❋ குறுகியகாலக் கடன்
- ❋ உண்டியல் மாற்றுதல்
- ❋ அடகு

பிரவேசம்: ரூபா 120-00 பங்குப்பணம்: ரூபா 25-00
மாதாந்தம்: ரூபா 20 00

செ இ. ஆனந்தராசா
பொது முகாமையாளர்

கே. எஸ். அருளானந்தர்
தலைவர்

மேலதிக விபரங்களுக்கு :

## நினைவு கூருகின்றோம்

**1992 - 01 - 01**

மேஜர்
அகத்தியர்



1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

❋ **சுதா** (ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு)
மட்டக்களப்பு வைத்திய மனையில்
வீரச்சாவெய்திய

❋ **தட்சணா** (சோமசுந்தரம் தட்சணாமூர்த்தி - ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு)
இதே ஆண்டு வவுனியா வீமன்கல்லில் சிங்கள ஊர்
காவல் படையால் கொலைசெய்யப்பட்ட
தமிழ் விவசாயி

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கொடுவா மடுவில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் தாக்குதலின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

செ இ. ஆனந்தராசா
பொது முகாமையாளர்

கே. எஸ். அருளானந்தர்
தலைவர்

மேலதிக விபரங்களுக்கு ;

பொது முகாமையாளர்,
அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கம் லிமிற்றெட்,
தபாற் கந்தோரடி, வட்டுக்கோட்டை.

(சி 3709)

மலரும் புத்தாண்டு மங்களகரமானதாக அமைய வேண்டுமென
மனநிறைவோடு வாழ்த்துகின்றோம்

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

உதிக்கும் புதுவருடத்துடன்

## புதிய கணக்கியல் வகுப்புக்கள்

**A. A. T.** (London, Sri Lanka) **Stage I & Stage II**

**I. A. B.** சகல பிரிவுகளும்

ஆரம்பம் 06-01-1992 (திங்கட்கிழமை)

விபரங்களுக்கு

**North Ceylon Technical Institute,**
**14, St. Peter's Lane,**
**Jaffna.**

(சி 3709)

சகோதரர்கள்.
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.
(சி 3725)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
கல்வியாண்டு 1990/91

## விவசாய பீடம்

விவசாய பீட 2ஆம் வருட மாணவர்களுக்கான 1990 91 ஆம் கல்வியாண்டு 1992 ஜனவரி 1ஆம் திகதியும் 1ஆம் (புதிய) வருட மாணவர்களுக்கான 1990 91ஆம் கல்வியாண்டு 1992 ஜனவரி 20ஆம் திகதியும் ஆரம்பமாகும். முன்னைய விளம்பரத்தில் குறிப்பிட்ட திகதியின்படி 1ம் வருட மாணவர்களுக்கு 01. 01. 92 இல் ஆரம்பமாகமாட்டாது.

பதிவாளர்

(சி 3712)

தமிழ் விவசாயி

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கொடுவாமடுவில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் தாக்குதலின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

❋ **மனோ** (கே. மனோகரன், ஏறாவூர்)

1987 ஆம் ஆண்டு நாச்சிக்குடாவில் உழவு இயந்திர விபத்தில் எமைப்பிரிந்த

❋ **ரவீந்திரன்** (நாவாந்துறை)

1989 ஆம் ஆண்டு இதே தினத்தில் சுழிபுரத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

**கண்டீபன்** (அப்புத்துரை கருணாகரன் சுழிபுரம்)

1990 ஆம் ஆண்டு முசல்குத்தியில் புளொட்முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**மேஜர் அகத்தியர்** (செல்லத்துரை ஹெக்ஸ்பேட் புவினோராஜ் - கோட்டைக்கல்லாறு, மட்டக்களப்பு)

**கப்டன் முரளி** (பெரியதம்பி பிரேம்குமார் 4 ஆம் கட்டை, பூநகரி)

1990 ஆம் ஆண்டு திருமலையில் முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த

**பூபதி** (செல்லையா நடேசன் - கந்தளாய், திருக்கோணமலை)

## ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டோராவர்.

— விடுதலைப்புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3715)

### சிந்தனைக்கு

நீண்டகாலம் அழுது விட்டோம்.
இனிமேல் அழுகைக்கு இடமில்லை
எங்கள் பலத்தைக் கொண்டே
எழுந்து நிற்போம்.
- சுவாமி விவேகானந்தர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 01-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

## யுத்த அறிவிப்புக்கள் தொடர்கின்றன

1992 சிங்கள பௌத்த பேரினவாதிகளின் இனவாத கூச்சலுடனும் சிங்கள இராணுவத்தின் யுத்தத்திற்கான அறைகூவலுடனும் ஆரம்பமாகிறது. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதியான சமரசத் தீர்வு ஒன்றைக்காணும் அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டம் நலிந்து கொண்டு செல்கிறது.

1991 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தஅறிவிப்பொன்றை விடுத்தனர். ஆனால் அதைத் தொடர்ந்துபேண சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் தயாராய் இருக்கவில்லை. இக் காலப்பகுதியே தமிழீழ விடுதலை வரலாறு பெரும் போர்களையும், தடைகளையும் சந்தித்த வருடமாக இருந்தது. புலிகளும் சிறிலங்கா இராணுவமும் ஆனையிறவிலும், மணலாற்றிலும் முறையே ஒவ்வொருமாதமாக இரு மாதங்கள் தொடர்ந்து மோதினர். ஆனால் போராட்டம் ஓயவில்லை.

இதேவேளை 1991 இன் ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் கொண்டிருந்த நிலைப்பாட்டினையே இன்றும் கொண்டுள்ளனர். யுத்த நிறுத்தத்திற்கும், சமாதானப் பேச்சு வார்த்தைக்கும் விடுதலைப் புலிகள் தயார். அதேவேளை இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றையே அரசாங்கம் காண விரும்புமானால் அதற்கு விட்டுக் கொடுக்கப் போவதில்லை. எதிர்த்துப் போராடவும் தயார். இது புலிகளின் நிலைப்பாடு.

ஆனால் கடந்த ஒரு வருட உக்கிர போரில் சிறிலங்கா அரசாங்கத்தின் அணுகு முறையில் தளம்பல்கள் ஏற்பட்டன. இனப்பிரச்சினைத் தீர்விற்கு இராணுவத் தீர்வு சாத்தியப் படப்போவதில்லை என அரசாங்கம் உணர்ந்துள்ளது. அதன் வெளிப்பாடாக சில சமாதானக் குழுக்களுக்கு மறைமுக ஆசியையும் வழங்கியது.

ஆனால் சிங்கள அரசாங்கம் விட்ட இடத்தை 1991 இறுதியில் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் பிரதிநிதிகளான பௌத்த சங்கங்கள் நிரப்பத் தொடங்கியுள்ளன. இராணுவத்துடன் இணைந்து சிலவேளை இராணுவத்தை முந்திக்கொண்டும் யுத்தத்திற்கான கூக்குரலை இச் சக்திகள் இடுகின்றன.

இந்த நிலையில் 1992 ஆம் ஆண்டும் யுத்தம் தொடர்வதற்கான சூழ் நிலைகளே தெரிகின்றன. பேரினவாத சக்திகளும், இராணுவமும் அரசியலில் செல்வாக்குச் செலுத்தும்வரை 1992 ஆம் ஆண்டென்ன, அதைத் தொடர்ந்துவரும் பல ஆண்டுகளும் இவ்வாறே இருக்கும். இச் சக்திகளை மீறி தலைமை ஒன்று உருவாகும்போதே சமாதானத்திற்கான வாய்ப்பு பிறக்கும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே இலக்காகக் கொண்டதாக வளர்ந்துவிட்ட- வளர்ந்து வருகின்ற சிங்களத் தலைவர்களில் இவ்வாறு ஒரு தலைமைத்துவம் உருவாக வாய்ப்பில்லை. ஆகையினால் தமிழர் தமது விடிவுக்காய் நீண்ட போருக்குத் தயாராவதை விடவும் வேறு வழி இல்லை.

# பொருளாதாரச் சீர்குலைவு; புதிய அமைப்பில் நெருக்கடி

(மொஸ்கோ)

பொருளாதார ரீதியில் சீர்குலைந்து வருவதால் சுதந்திர நாடுகளின் புதிய பொது நல அமைப்பு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்று முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் எச்சரித்துள்ளார்.

அடுத்த ஆண்டில் இருந்து 1998 ஆம் ஆண்டு வரை சோவியத் பொருளாதார அமைப்பிற்குப்பதிலாக சந்தை முறை பொருளாதாரத்தை ஏற்படுத்தும் போது நெருக்கடிகள் தோன்றலாம் என்றும் கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொது நல அமைப்பிற்குஉணவுப்பொருள்களையும், மருந்துப்பொருள்களையும் அனுப்பி வைக்குமாறு மேற்குலக நாடுகளை இவர் கேட்டுள்ளார்.

இத்தகைய உதவிகள் மேற்குலகில் இருந்து இந்த நாடுகளுக்கு கிடைக்காவிடில் இந்த சீர் திருத்தங்கள் பயனற்றுப் போய்விடும் என்றும் அங்கு கலவரங்கள் தோன்றிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த பொதுநல அமைப்பால் சோவியத்திலிருந்து விஞ்ஞான நிபுணர்களும் விஞ்ஞானிகளும் இங்கிருந்து வெளியேறி விடுவர் என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

## யுத்தத்தை நிறுத்துமாறு யூகோஸ்லாவியா கோரிக்கை

(லண்டன்)

குறொசியாவில்நடைபெற்று வரும் சண்டையை நிறுத்துமாறு அதில் சம்பந்தப்பட்டவர்களையும், உலக நாடுகளையும் யூகோஸ்லாவியா மத்திய அரசாங்கம் கேட்டுள்ளது.

இதற்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட சரியான முறையில் பின்பற்றப்படாத யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவையை பின்பற்றுமாறு பிணக்கில் சம்பந்தப்பட்ட அனைவரையும்யூகோஸ்லாவியா அரசாங்கம் கேட்டுள்ளது.

யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் பதினான்கு தடவை இடம்பெற்றுள்ளன என்றும் யூகோஸ்லாவியாவில் அமைதியை நிலைநாட்ட அங்குள்ள மக்களும், ஐராப்பிய நாடுகளில் உள்ள மக்களும் தமது பங்கினை செலுத்த வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இதே நேரம் பிரிந்து சென்ற குடியரசுகள்மீது தொடர்ந்தும் மத்திய அரசின் இராணுவம் றொக்கெட் தாக்குதல்களை நடத்துகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

## முஸ்லிம்கள் சிலருக்கு 'தொண்டா' என எண்ணம்

- மன்சூர்

''சில முஸ்லிம்கள் தம்மை தொண்டமான் என நினைக்கின்றனர்'' என்று வர்த்தகத் துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பாடசாலை விழா ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போதே மன்சூர் இவ்வாறு குறிப்பிட்டார்

முஸ்லிம்களுக்கெனத் தனிக் கட்சி அமைக்கப்பட்டதால் தான் பிற சமூகத்தினர் எம்மைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கின்றனர் என்றும் -

முஸ்லிம்களுக்கென தனிக் கட்சி தேவைப்பட்டிருப்பின் நாற்பது வருடங்களுக்கு முன்னரேயே அதனை அக்காலத் தலைவர்கள் அமைத்திருப்பர் என்றும் மன்சூர் தனது உரையில் குறிப்பிட்டார்,

### ராஜீவின் கொலை

## அரசியல்வாதிகளுக்கு முன்னதாகவே தெரியும்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படப்போவது குறித்து ஏற்கனவே தெரிந்திருந்த பல அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். இவர்கள் குறித்த விபரங்கள் விரைவில் வெளிவரும் என்று ஜனதாக்கட்சித்தலைவர்சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார்.

இக்கொலைத்திட்டம் பற்றி சில அரசியல் வாதிகளுக்கு 24 மணி நேரத்திற்கு முன்னதாகவே தெரியும். சில அரசியல் வாதிகளுக்கு இரண்டுமாதங்களுக்கு முன்னதாகவே தெரிந்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

தமிழ் நாட்டில் புலி ஆதரவாளர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பாவிக்கப்படுவதை ஆதரித்த சுப்பிரமணிய சுவாமிகள் புலிகளுக்கு உதவுபவர்கள் இந்திய விரோதிகள் என்றும் கூறினார்.

### மலேசியா

கையிலுள்ள புலிகளின் மறைவிடத்தைநோக்கி செல்லவிருந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளாராம்.

இதேவேளை தமிழகத்தில் ராஜீவ் காந்தி கொலையுண்டு குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்த போது அருகில் இருந்தவர்களில் ஒருவர் மலேசியத் தமிழர் எனவும், அவரும் அச் சம்பவத்தில் உயிரிழந்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன் பிற இரு மலேசியத் தமிழர்கள் பின்னர் லண்டனில் புலிகள் பிரமுகர்களை சந்தித்துப் பேசினர் எனவும், இவர்கள் இருவரையும் மலேசியப் பொலிசார் தேடி வருவதாகவும், கண்டுபிடிக்கப்பட்டதும் இந்திய அதிகாரிகள்வசம் ஒப்படைக்கப்படுவரெனவும் மலேசியப் பொலிசார் கூறியுள்ளனர்.

இதேவேளைராஜீவ்கொலை தொடர்பாகமூன்று சந்தேக நபர்களைத் தேடி இந்தியப் புலனாய்வுத்துறையினர் மலேசியா சென்றுள்ளனர். புலனாய்வு துறை சார்பில் மலேசியா போய் சேர்ந்த அமொட்கர் என்ற அதிகாரி மலேசியாவுக்கான இந்தியத் தூதுவருடன் சேர்ந்து மலேசிய இரகசிய பொலிஸ் தலைவரை சந்தித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

### மீட்பு நிதி

சாங்க அதிபர் பிரிவில் எதிர் வரும் 6 ஆம் திகதி திங்கட் கிழமை மீட்பு நிதி திரட்டப் படவுள்ளது. இதுவரை மீட்பு நிதி செலுத்தாதோர் அன்றைய தினம் மாலை 2·30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் அதனைச் செலுத்தலாம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவு தெரிவித்துள்ளது.

### லலித்

டுத்துவதாககொழும்பில் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

சிறிமாவோ குணமடைந்து வருவதாகவும், மகள் சந்திரிக்கா ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளராக நிற்கும் நோக்கத்துடன் கட்சியின்தலைமைப் பதவியை அடைய மெதுவாக அடியெடுத்து வைப்பதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிறிமாவோவின் 31 வருட கால அரசியல் வாழ்க்கையில் 31 குற்றச்சாட்டு மனுக்கள் சிறிமாவோவுக்கு எதிராக கொண்டு வந்திருக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும்,சிறிமாவோ அம்மையாருடன் ஒப்புநோக்கும்போது ஜனாதிபதி பிரேமதாசா தங்கமான மனிதன் என்று சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அநுரா கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிமாவோபண்டார நாயக்காவின் அண்மைக்கால சுகவீனத்துக்கு காரணம் அநுரா பண்டாரநாயக்காதான் என்றும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### கலிபர் தாக்குதல்

வலந்தலைச்சந்தியில் உள்ள சிறிலங்கா இராணுவ காவல் அரணில் இருந்து பொன்னாலைப்பகுதியை நோக்கி கலிபர் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கின்றது.

### இலங்கை திருப்பும்

முதல் அகதிகள் குழு எப்படித் திருப்பி அனுப்பப்படுவார்கள், இவர்களின் பயணச் செலவை யார் பொறுப்பது என்பது குறித்து சிறிலங்கா அரசு இந்திய அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திவருகிறது.

இலங்கையில் ஓர் ஆண்டுக்கு முன்னிருந்த போர் வன்முறைகள்இப்போது இல்லாவிட்டாலும் அவ்வப்போது பொது மக்கள் மீது பழிவாங்கும் தாகுதல்கள் நடத்தப்படும் சம்பவங்கள் இடம்பெறச்செய்கின்றன. அத்துடன் புலிப்படையினருக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே எந்த நேரமும் சண்டைமூளக் கூடும் என்றாலும் தமிழ்நாட்டில் இருக்கும் இலங்கை மக்கள் திருபபவேண்டும் என்று சிறிலங்கா அரசு விரும்புகின்றது. அகதிகள் பாதுகாப்பாக வீடுகளுக்குத் திரும்பும்வரை அரச முகாம்களில் தங்கியிருக்கலாம் என்று இலங்கை அரசு கூறுகின்றது என்றும்—

நாடு திரும்பும் அகதிகளுக்கு ஆரம்பத்தில் குடியிருப்பு, வேலை வாய்ப்புக்களுக்கு நிதி உதவி வழங்குவதாகவும், பாதுகாப்புப்படையினர்அகதிகளின் பாதுகாப்புக்கு உறுதியளிப்பார்கள் என்றும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

சிறிலங்கா இராணுவம் முன்னேறிச் சென்ற சமயம் அகதிகளாய் இடம்பெயர்ந்து ஓடிச் சென்றவர்களுக்கு இந்த வாக்குறுதி நம்பிக்கையைத் தருமோ என்பது சந்தேகமே என்றும்பி.பி. ஸி.தெரிவித்தது

### யாழ்

வழங்கப்படவுள்ளது. இத் தகவலை யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.வேலாயுதம் தெரிவித்தார்.

### கடல்நீரேரி

அந்தஇடத்திலேயே கொல்லப்பட்டதும், பலநவீனரக ஆயுதங்கள் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

மேலும் வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலினால் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

# கர்நாடகத்தில் வன்முறை; தமிழகத்தில் கதவடைப்பு

(சென்னை)
கர்நாடகத்தில் தமிழர்களுக்கெதிரான வன்முறையைக் கண்டித்துதமிழ்நாட்டில் வியாழன் அன்று மாநிலம் தழுவிய பந்த்அனுஷ்டிக்கப்படவுள்ளது பந்த் நடத்துவது என்ற உத்தேச யோசனையைக் கைவிடுமாறு கர்நாடக அரசு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை கேட்டுள்ளது மாநிலக் கல்வி அமைச்சர் நேற்று பெங்களூரில் செய்தியாளருடன் பேசும்போது,

காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பணிதான் தமது முன்னுரிமை பெறும் பணி என்று பிரதம மந்திரி ஏற்கனவே கூறி விட்டாரென்று தெரிவித்தார்.

இந்த உத்தேச பந்த் போராட்டத்தின்போது தமிழ்நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் முகமாக இராணுவத்தைக் கடமையில் ஈடுபடுத்துமாறு கர்நாடக சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவரான டி. பி. சந்திர கௌடா பிரதம மந்திரியை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இதேவேளை தமிழ்நாட்டில் பந்த் போராட்டத்தை முன்னிட்டு வியாழக்கிழமை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தென்மத்திய ரயில்வே சில ரயில் போக்குவரத்துக்களையும் ரத்துச் செய்துள்ளது.

இதேவேளை கர்நாடக மாநிலத்தில் தமிழர் தாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தால் தமிழகம் முழுவதும் நேற்று நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை பொதுவேலைநிறுத்தம்செய்ய அனைத்துக்கட்சிக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஆர்ப்பாட்டத்தைத் தி. மு. க. கைவிட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகின்றது.


## 1-ம் ஆண்டுநினைவஞ்சலி



### கப்டன் றோய்
### (சிற்றம்பலம் மகேந்திரராசா)

வீரஜனனம்:- 1966-05-16

வீரச்சாவு:- 1990-12-31

திருமலை தனில் நீ ...
எரிமலையாய் நின்றாய் ..
குமுறியது உன்துப்பாக்கி...
கதறியது சிங்களம்...
எல்லைகள் இட்டே நீ
எதிரிக்கு
ஈழத்தில் சாதனை
செய்தாய்...
பலாலியில் எழுந்தது ...

பாவியின் எறிகணை ...
உடல் மட்டும் பிரிந்தது..
எமைவிட்டு .. உன் ..
உயிர் மட்டும் கலந்தது..
எம் உயிருடனே..
நீ இன்று நிழல் ..
ஆனால் ...
உன் செயல்கள் என்றும்
நிஜம்!

குறிப்பு:- 06-01-92 அன்று (வலதுகரை முத்தையன் கட்டு) வீட்டில் நடைபெற இருக்கும் உபசாரத்திற்கு இயக்க நண்பர்களையும், உறவினர்களையும், அன்புடன் அழைக்கின்றோம்.

நியூ சென் பீற்றர்ஸ் பேக்கரி,
முல்லைத்தீவு. (2058)

அத்தான்,
அக்கா, மருமக்கள்


தொண்டமானின்

புப்போன்ற தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் சாசனத்திற்குட்பட்டே தீர்வுகாணப்பட வேண்டும் என ஐ.தே.க. வின் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை தெரிந்ததே.

இந்தத் தீர்மானங்கள் அமைச்சர் தொண்டமான் முன்வைத்த தீர்வுத் திட்டத்திலிருந்து ஆளுங்கட்சி விலகிச் செல்வதையே காட்டுவதாக யு.என். ஐ. செய்தித் தாபனம் கருத்து வெளியிட்டுள்ளது.

## கிளிநொச்சி இல.வங்கிகிளை வவுனியாவுடன் இணைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக்கிளை வவுனியா மாவட்ட இலங்கை வங்கி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த வங்கிக்கிளை இதுவரைகாலமும் யாழ். மார்க்கட் இலங்கை வங்கி அலுவலகத்தின் கீழ் இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## 350 சோடி மாடுகளுக்கு உழவுப் பயிற்சித் திட்டம்

மணலாறு மாவட்டத்தில் 350 சோடி மாடுகளை உழவு பழக்கும் திட்டத்திற்குட்படுத்தி உள்ளதாக தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக தமிழீழ ஆய்வு நிறுவனம் வெளியிட்ட ஒரு செய்திக் குறிப்பில் அரசின் பொருளாதாரத் தடைகாரணமாக, எரிபொருள், உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் மணலாற்றில் விவசாயச் செய்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. தற்போது தமிழீழ ஆய்வு நிறுவனம் மாடுகளை வாங்கி உழவு பழக்கும் செயற்பாட்டுக்குட்படுத்தியதால் இந்நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் இத்திட்டத்தால் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் நிலப்பரப்பு அதிகரிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியா - பிரிட்டன் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம

'பயங்கரவாதம்' மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிக்கவும்,அவர்களைஅவர்களதுசொந்த நாட்டில் ஒப்படைக்கப்படவும் வழி செய்யும் ஒப்பந்தமொன்றை இந்தியாவும், பிரிட்டனும் செய்து கொள்ளவுள்ளன.

பிரிட்டனின் உள்துறைச்செயலாளர் கெனத் பேக்கர் ஆறுநாள் பயணமொன்றை மேற்கொண்டு நாளை டில்லிவரும்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். ஐரோப்பிய நாடுகளில் ஊடுருவியிருக்கும் இந்திய அரசிற்கெதிரானவர்களைக் கண்டுபிடிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்யும் என்றுடில்லியில் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## இந்தியா - சிறிலங்கா கலாசார உடன்பாடு

இந்தியாவும் - சிறிலங்காவும் கலாசார பரிவர்த்தனைத் திட்டமொன்றில் கையெழுத்திடவுள்ளன. எதிர்வரும் ஐந்தாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை இதுபற்றி சிறிலங்கா அதிகாரிகளும், இந்திய அதிகாரிகளும் டில்லியில் கூடி விவாதிப்பரென டில்லி வரவிருக்கும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் கூறியுள்ளார்.

வீரச்சாவு

மதிச்செல்வன் என்னும் றீகன் (இரத்தினம் மோகன் மேன்காமம், கிளிவெட்டி மூதூர் திருமலை) என்பவர் நேற்றைய தினம் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்குவில் என்னும் இடத்தில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியபோது மாமாங்கம் பகுதியைச் சேர்ந்த கௌரி என்பவர் சயனைட் அருந்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார். இவர்களுக்கு விடுதலைப் புலிக்ள் வீரவணக்கம் தெரிவித்துள்ளனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மதிச்செல்வனின் புகழுடல் இன்று காலை எட்டுமணி முதல் ஒன்பது மணிவரை கொக்குவில் கேணியடியிலிருக்கும் திருக்கோணமலைத் தொடர்பக அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காகவைக்கப்படும். பின்னர் பதினொரு மணிவரை அரியாலை செல்லக்கிளி அம்மான் வீடமைப்பு திட்டத்திலிருக்கும் சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


## கம்பியூட்டர் கல்வி

- BASIC
- d BASE III+
- LOTUS 1 2-3
- WORD STAR 2000+

ஆகிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் தெளிவான முறையிலும் எளிதான வகையிலும் போதிக்கப்படுகின்றன.

### புதிய பிரிவுகள் ஆரம்பம்:

03 - 01 - 1992 (வியாழன், வெள்ளி)
04 - 01 - 1992 (சனி, ஞாயிறு)
06 - 01 - 1992 (திங்கள், செவ்வாய், புதன்)

குறிப்பு: O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
விரிவுரைகள் யாவும் தமிழ்மொழி மூலமும் போதிக்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

வடமராட்சியில்:
யுனிக்கோ
கம்பியூட்டர்
சென்ரர்,
சதாபொண்ஸ்
அல்வாய் கிழக்கு,
அல்வாய்



யாழ். நகரில்:
யுனிக்கோ
கம்பியூட்டர்
சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3716)


?

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.